# பொதுக்காலம் 19ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே! பொதுக்காலம் 19ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடனே அழைக்கிறோம்.

மனிதர்கள் விழிப்போடும், ஆயத்தத்தோடும் இருப்பதைப் பார்க்கின்றோம். வங்கியிலே லாக்கர் நிறைய நகைகள், இல்லத்திற்கு காவலாளி, அவரையும் நம்பாத உள்ளங்கள் ஆங்காங்கே CCTV Cameraக்களை பொருத்தி எந்த விதத்திலும் தன் வீட்டை, இடத்தை யாரும் அணுகிவிடக் கூடாது என்பதில் கவனம்.

தன்னுடைய குழந்தையை எந்த துறையில் தேர்ச்சி பெறச் செய்து, எப்படியும் பொருளாதாரத்தில் உயர்ந்த இடத்தில் அமர வைத்திடல் வேண்டும். இப்படி உலக போக்கினில் பலர் இன்று விழிப்போடும், ஆயத்தத்தோடும் இருப்பதைப் பார்க்கின்றோம்.

இத்தகைய விழிப்புணர்வு நம்பிக்கையின் வெளிப்பாடு. இதனையா நாம் அடுத்த தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம். நம் முன்னவர்கள் இத்தகைய விழிப்புணர்வையா நமக்கு விட்டுச் சென்றார்கள்? இத்தகைய ஆயத்தமான நிலையும், விழிப்பான உணர்வும் மண்ணுலகிலும், விண்ணுலகிலும் நமக்கு வாழ்வை தந்துவிடவாப் போகின்றது?

இறைவார்த்தைப் போதிப்பது, இறையச்சத்துடனே கூடிய நம்பிக்கையைத் தான் நமக்கு போதிக்கின்றது. உலக வாழ்வின் காலமோ சொற்பம். இந்த உலக வாழ்வின் கவலைகளாலும், இன்பங்களாலும், துன்பங்களாலும், துயரங்களாலும், பொருட்களாலும், புவி ஆளும் அதிகாரத்தாலும் அற்ப மனித வாழ்வை நிறைத்திருந்தால் மறு உலக வாழ்வுக்கான ஆயத்தத்தை எப்படி மனிதன் மேற்கொள்ள முடியும் என்று கேட்டுப் பார்க்க இறை அறிவு நம்மை அழைக்கின்றது.

இறை நம்பிக்கையோடு, இறையச்சத்தோடு வாழ்ந்த பழைய உடன்படிக்கை மகான் ஆபிரகாமை குறித்து இன்றைக்கு கேட்டறிகின்றோம். வாழும் காலத்திலேயே உலகத்தால் மாசுபடாமல், விண்ணக மகிழ்ச்சியை தமதாக்கி இறையரசின் விழுமியங்களை வாழ்வாக்கிய நம் முன்னவர்களை மனத்தில் கொண்டு விழிப்போடும், இறையச்சத்துடனும், ஆயத்தமாய் இருந்து பயணிக்க பலியிலே வரம் வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை (சாலமோனின் ஞானம் 18: 6-9)

நீதிமான்கள் மீட்கப்படுவார்கள்;

நீதிமான்கள் வாழ்வு பெறுவார்கள்;

நீதிமான்கள் என்றென்றும் கடவுளைப் போற்றி பாடித் துதிப்பார்கள்.

இத்தகைய வாழ்வின் நம்பிக்கையை எடுத்துரைப்பதாக உள்ள சாலமோனின் ஞானநூல் சொல்லும் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (எபிரேயர் 11: 1-2, 8-19)

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியர் நம்பிக்கை என்றால் என்ன? அதன் அர்த்தம் என்ன? நம்பிக்கையை கொண்டு வாழ்ந்த பழைய உடன்படிக்கை நூலின் மாந்தர்கள் உயர்வு பெற்றது எப்படி? அத்தகையவர்களுக்கு கடவுளும் தன் வாக்குறுதியை எல்லாம் நிறைவேற்றி அவர்களை உயர்த்தினார் என்பதைச் சொல்லும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நம்பிக்கைக்குரிய பொறுப்பாளராய் வாழ்ந்த இயேசுவே இறைவா!

உம் வழித்தோன்றல்களாய் திரு அவையை பொறுப்புடனே நடத்திச் செல்ல பணியமர்த்தப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள் தங்கள் அர்ப்பண வாழ்வினிலே இறையச்சத்துடனே தங்களது கடமைகளைச் செவ்வனே ஆற்ற அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. விண்ணக நாட்டை நாடக் கற்றுத் தந்த இயேசுவே இறைவா!

மண்ணகத்தில் நாட்டை ஆளப் பொறுப்பேற்றிருக்கும் அன்பர்கள் சுயமைத்தன்மையை விடுத்து தெய்வ பயத்தால் நேர்மையை ஆடையாக, உண்மையை, வாய்மையை வாய்மொழியாக, நீதியை நடைமுறை வாழ்வாக கொண்டு பயணிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. மிகுதியாக வாரி வழங்கும் வள்ளலே எம் இறைவா!

திருஅவை அன்பர்கள், திருவருட்சாதனங்கள், இறைவார்த்தை, இறைவிருந்து என பலவற்றில் இருந்து மிகுதியாகப் பெற்றுக் கொண்ட கத்தோலிக்க கிறித்தவர்களாகிய நாங்கள் கணக்கு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்பதனை உணர்ந்து பொறுப்புடனே பயணிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நன்மையின் நாயகனே எம் இறைவா!

நன்மையையும் இடர்களையும் ஒன்றாகப் பகிர்ந்து கொள்வார்கள் என்ற இறைமொழிக்கு ஏற்ப எம்மோடு பயணிக்கின்ற மாந்தர்தம் அழுகையிலும், மகிழ்வினிலும் உடனிருந்து உம் உடனிருப்பை உறுதிப்படுத்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. எதிர்நோக்கி இருப்போருக்கு வரமருளும் இறைவா!

எதிர்நோக்கு கொண்டு பயணித்து வரும் நம்பிக்கையாளர்களின் வாழ்வு மேம்படவும், அவர்களின் நம்பிக்கை வீண் போகாதவாறும், மன்றாட்டு மறுக்கப்படாதவாறும், இவ்வாறு அவர்கள் நம்பிக்கை இழந்து போகாதவாறு உம் அருளிரக்கத்தை பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com